The National Kidney Foundation

NKF

# உங்கள் உப்பு உட்கொள்ளலைக் குறைக்கவும்!

## சோடியம் என்றால் என்ன?

உடலின் திரவ சமநிலையைக் காத்துக்கொள்ள உதவும் முக்கியமான ஒரு தாதுப்பொருள். உப்பில் 40% சோடியம் உள்ளது. அதேபோல், ஸாஸ்-கள், சுவையூட்டும் பொருட்கள், பதனப்பொருள்கள் மற்றும் பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட உணவு ஆகியவற்றிலும் உள்ளது.



## இது ஏன் ஆபத்தானது?

அதிகளவு சோடியம் உட்கொண்டால் உயர் இரத்த அழுத்தம் வரலாம். இது சிறுநீரக செயலிழப்பு, பக்கவாதம், இருதய நோய் ஆகியவற்றுக்கு வழிநடத்துகிற முக்கிய காரணங்களில் ஒன்றாக இருக்கிறது !

## நான் எவ்வளவு சேர்த்துக் கொள்ளலாம்?

பரிந்துரைக்கப்பட்ட சோடியம் அளவு: ஒரு நாளைக்கு 1 தேக்கரண்டி (தேக) உப்பு அல்லது 2,000மிகி.



=



=



**உப்பு 1 தேக்கரண்டி** = **அடர்த்தி குறைந்த சோயா ஸாஸ் 8 தேக்கரண்டி** = **சிப்பி ஸாஸ் 15 தேக்கரண்டி**

தகவல் மூலம்: உணவிலுள்ள எனர்ஜி மற்றும் சத்து தொகுப்பு, ஹெல்த் ப்ரமோஷன் போர்ட், 2011

# சமையலில் இயற்கையான சமையல் சேர்வைகளைப் பயன்படுத்துங்கள்













உணவுக்கு சுவைகூட்ட, உப்பு தவிர, சுவையும் மணமுமுள்ள புதிய மற்றும் இயற்கையான பல சேர்வை பொருட்கள் உள்ளன!

# வெளியே சாப்பிடும்போது ஆரோக்கியமான உணவுகளைத் தேர்ந்தெடுங்கள்

| சோடியம் அதிகமுள்ள உணவுகள் | சோடியம் அளவு (மிகி) | குறைவான சோடியம் உள்ள மாற்று உணவுகள் | சோடியம் அளவு (மிகி) |
|---|---|---|---|
| ரோஸ்ட்டட் சிக்கன் ரைஸ் | 1,112 | ஸ்டீம்டு சிக்கன் ரைஸ் | 698 |
| பால் சேர்க்கப்பட்ட, வறுத்த மீன் பீ கூன் சூப் | 2,708 | பால் சேர்க்கப்படாத, துண்டு மீன் சூப் | 1,808 |
| மீ சியம் (Mee Siam) கிரேவியுடன் | 2,347 | மீ சியம் (Mee Siam) கிரேவி இல்லாமல் | 1,008 |
| கடல் உணவு டாமியம் (Tomyum) பான் மியான் சூப் | 4,439 | போர்க் டம்ப்ளிங் பான் மியான் சூப் | 2,816 |
| கிரீமி சிக்கன் பாஸ்தா | 1,161 | ப்ரான் அக்லியோ ஒலியோ (Aglio Olio) | 786 |
| சிக்கன் மசாலா கிரேவியுடன் (150கி) | 768 | சிக்கன் டிக்கா (100கி) | 263 |
| வறுத்த இறால் வத்தல் (100கி) | 750 | அரிசி வத்தல் (100கி) | 369 |
| சீஸ் ப்ரைஸ் (1 பிளேட், 186கி) | 658 | டிரஸ்ஸிங் செய்யப்படாத பேக்ட் (Baked) உருளைக்கிழங்கு (1 முழுமையாக, 202கி) | 16 |
| சாத்தே (Satay) கிரேவியுடன் (10 துண்டுகள்) | 920 | சாத்தே(Satay) கிரேவி இல்லாமல் (10 துண்டுகள்) | 231 |

*1 முதல் 5 பொருட்கள் ஒருமுறை பரிமாறும் அளவில் அமைந்துள்ளன

தகவல் மூலம்: உணவிலுள்ள எனர்ஜி மற்றும் சத்து தொகுப்பு, ஹெல்த் ப்ரமோஷன் போர்ட், 2011

**குறைவான கிரேவியை கேளுங்கள், சூப் குடிப்பதைத் தவிருங்கள், உப்பிட்ட முட்டை மற்றும் உப்பிட்ட மீன் போன்ற பதப்படுத்தப்பட்ட உணவுகளைக் குறைத்துக்கொள்ளுங்கள்.**

# சத்து விவரப் பட்டியலை எப்படி வாசிப்பது?

1. ஒரேவித பொருட்களோடு ஒப்பிடுக (உதாரணமாக பிரெட் vs பிரெட்)

2. ஒரு பாக்கெட்டில் உள்ள உணவை எவ்வளவு தடவை பரிமாறலாம் என இது காட்டுகிறது

3. 100 மிலி-யுடன் ஒப்பிடுக

4. ஒரே சத்துப் பிரிவோடு ஒப்பிடுக

**5. குறைந்தளவு சோடியம்**

முழுதானிய பிரெட்

## சத்து விவரம்

ஒரு பாக்கெட் உணவின் பரிமாறும் அளவு: 5
பரிமாறும் அளவு: 1 துண்டு (72கி)

| **சத்துக்கள்** | **ஒருமுறை பரிமாறும் அளவில்** | **100மிலி* அளவில்*** |
|---|---|---|
| **ஆற்றல்** | 151கிக | 210கிக |
| **புரதம்** | 11.6கி | 16.1கி |
| **மொத்த கொழுப்பு** | 3.0கி | 4.2கி |
| -நிறைவுற்ற கொழுப்பு | 0.5கி | 0.7கி |
| -டிரான்ஸ் கொழுப்பு | 0கி | 0கி |
| **கொலஸ்டிரால்** | 0மிகி | 0மிகி |
| **கார்போஹைட்ரேட்டுகள்** | 19.4கி | 26.9கி |
| -மொத்த சர்க்கரை | 1.7கி | 2.3கி |
| -நார்ச்சத்து | 8.6கி | 11.9கி |
| **சோடியம்** | 207மிகி | 288மிகி |
| **கால்ஷியம்** | 108மிகி | 150மிகி |

**சேர்வைகள்: தண்ணீர், முழுதானிய மாவு, கோதுமை நார்ச்சத்து, ஈஸ்ட், சர்க்கரை, உப்பு, கோதுமை மாவுச்சத்து, பாமாயில்**

**இறங்கு வரிசையிலும், எடையைப் பொறுத்தும் உணவுச் சேர்வைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.**